# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.வி.மு.ச. பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093685

1. District / மாவட்டம்: விருதுநகர் — P.S. / காவல் நிலையம்: ஊ.த.க.பிரிவு விருதுநகர் — Year / ஆண்டு: 2020 — FIR No / மு.த.அ. எண்: 07/2020 — Date / நாள்: 29.12.2020

2. (i) Act / சட்டம் — Sections / பிரிவுகள்: 7 of Prevention of
(ii) Act / சட்டம் — Sections / பிரிவுகள்: Corruption (Amendment)
(iii) Act / சட்டம் — Sections / பிரிவுகள்: Act 2018
(iv) Other Acts & Sections / பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்: 19.12.2020 — Date from / நாள் முதல்: 23.12.2020 — Date to / நாள் வரை: 26.12.2020
Time Period / நேர அளவு: 10.30 hrs — Time from / நேரம் முதல்: 12.00 hrs — Time to / நேரம் வரை: 09.30 hrs

(b) Information Received at P.S. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 29.12.2020 / 06.30 hrs — Time / நேரம்:

(c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time / நேரம் :

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், வ.புதுப்பட்டி.
Beat Number : / முறைக் காவல் எண் — (b) Address : / முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: திரு. சு. மகேந்திரன் — (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர்: சுந்தரராஜ்
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality / நாட்டினம் — (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue / வழங்கப்பட்ட நாள் — Place of Issue / வழங்கப்பட்ட இடம்
(f) Occupation / தொழில்: கூலி — (g) Address / முகவரி: கதவு எண் 18/1, பசும்பொன் தேவர் தெரு, வ.புதுப்பட்டி கிராமம், வத்திராயிருப்பு தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. சீதாராமலிங்கம், கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், வ.புதுப்பட்டி, வத்திராயிருப்பு தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியின் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுகிறது.

நான் இன்று 29.12.2020ம் தேதி காலை 08.30 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு தாலுகா, கதவு எண். 18/1, பசும்பொன் தேவர் தெரு, அ. புதுப்பட்டி கிராமம், வத்திராயிருப்பு தாலுகா, என்ற முகவரியை சேர்ந்த திரு. சுந்தரராஜ் என்பவரின் மகன் திரு. சு. மகேந்திரன் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று மேற்படி மனுமீது இரகசிய விசாரணை செய்ததில் எதிரிமீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், அதற்குப் பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தென்சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 29/12/2020 | [signature] U.M. 29/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29/12/2020 at 11.15 hrs

Name: பெயர் U.M. [illegible]
Rank: நிலை D.S.P./V.&A.C./Virudhunagar.

விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.9/2020 பிரிவு 7 of PC (Amendment) Act 2018ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

இன்று (29.12.2020) காலை 8.30 மணிக்கு விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/2020 பிரிவு 7 of PC (Amendment) Act 2018 ஆக எதிரி திரு.சிவராமலிங்கம், கிராம நிர்வாக அலுவலர், வ.புதுப்பட்டி கிராமம், விருதுநகர் மாவட்டம் என்பவர்மீது வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர்÷ சு.மகேந்திரன், த/பெ.கு.சுந்தரராஜ் (லேட்), கதவு எண்.18/1, பசும்பொன் தேவர் தெரு,வ.புதுப்பட்டி [Post] வத்திராயிருப்பு [T.K] விருதுநகர் (D.T.) PIN÷626116. பெறுநர்÷ உயர்திரு. காவல் துணைக் கண்காணிப்பாளர் 'AVL', ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். ஐய்யா நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வ.புதுபட்டி கிராமம் நத்தம் சர்வே எண்÷689 1/Aல் வத்திராயிருப்பு உப பதிவு அலுவலக ஆவண எண்÷1301/1977ன்படி எனது அம்மா பொன்னுவேலம்மாள் உட்பட 17 பேர்கள் பெயரில் காலிமனையும், வத்திராயிருப்பு உப பதிவு அலுவலக ஆவண எண்÷1012/1980ன்படி எனது அப்பா திரு:-கு.சுந்தரராஜ் பெயரில் காலிமனையும் உள்ளது. மேற்படி இரண்டு காலிமனை இடங்களையும் விற்க முடிவு செய்து, மேற்படி இரண்டு காலிமனை இடங்களுக்கும் அடங்கல் [பட்டா] பெறவேண்டி அந்த 2 இடங்களுக்குரிய பத்திர நகல்களுடன் கடந்த 15/12/2020ஆம்தேதி காலை சுமார் 11.00 மணியளவில் வ.புதுப்பட்டியில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்று அங்கு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திரு:-சிவராமலிங்கம் அவர்களை சந்தித்து கேட்டேன். அவர் அந்த இரண்டு பத்திர நகல்களையும் வாங்கிப்பார்த்துவிட்டு, உங்களது அப்பா திரு.சுந்தரராஜ் பெயரில் உள்ள இடத்திற்கு மட்டும் அடங்கல் [பட்டா] கிடைக்க பரிந்துரை செய்கிறேன் என்றும், உங்களது அம்மா பெயரில் உள்ள இடத்திற்கு பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்றும் கூறி, உங்களது அப்பா பெயரில் ஒரு மனு கொடுங்கள் என்று சொன்னார். நான் அவரிடம் என்னுடைய அப்பா உயிருடன் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் அப்பா உயிருடன் இல்லை என்றால் அவரது இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் ஆகியவற்றை அந்த பத்திர நகலுடன் இணைத்து உங்களது பெயரில் ஒரு மனுவாக கொடுங்கல் என்றும், இந்த வேலையை முடித்துக் கொடுக்க கொஞ்சம் பணம் செலவாகும் என்று சொன்னார். ஆகையால் நான் அன்றே [15/12/2020] எனது பெயரில் ஒரு மனுவினை தயார் செய்து, அத்துடன் எனது அப்பா பெயரிலுள்ள பத்திரத்தின் நகல், எனது அப்பாவின்

இறப்பு சான்றிதழ் நகல், வாரிசு சான்றிதழ் நகல் ஆகியவற்றை இணைத்து அவரிடம் கொடுத்தேன். அதை அவர் வாங்கி பார்த்துவிட்டு அப்போதும் அவர் அந்த வேலையை முடித்துக்கொடுக்க கொஞ்சம் பணம் செலவாகும் என்றும், அந்த பணத்தை ரெடி பண்ணுங்க என்றும் சொன்னார்; நான் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் 4 நாட்கள் கழித்து அதாவது கடந்த [19/12/2020]ஆம்தேதி காலை சுமார் 10/30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது கிராம நிர்வாக அலுவலர் திரு.சிவராமலிங்கம் மற்றும் தலையாரி திரு.பாண்டியனுடன் வந்து என்னுடைய அப்பா பெயரில் உள்ள இடத்தை காட்டச்சொல்லி பார்வையிட்டார். பின்பு கிராம நிர்வாக அலுவலர் திரு:-சிவராமலிங்கம் என்னை தனியாக அழைத்துச்சென்று நான் கொடுத்த மனுமீது நடவடிக்கை எடுக்க அவருக்கு ரூ.6,000/- தரவேண்டும் என்று கேட்டார். உடனே நான் அவரிடம் நான் கூலி வேலை செய்துதான் பிழைப்பு நடத்துகிறேன், என்னால அவ்வளவு பணம் ரெடிபண்ண முடியாது சார் என்று சொன்னேன். அதற்கு அவர் அடங்கல் [பட்டா] கேட்டு விண்ணப்பம் செய்யும் அனைவரிடமும் கேட்கும் பணத்தைதான் என்றும், உங்களிடம் மட்டும் அப்படி கேட்கவில்லை என்றும் கூறிவிட்டு சென்றுவிட்டார். பின்னர் கடந்த [23/12/2020] ஆம் தேதி மதியம் சுமார் 12/00 மணியளவில் வ.புதுப்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று, கிராம நிர்வாக அலுவலர் திரு:-சிவராமலிங்கம் அவர்களிடம் அடங்கல் [பட்டா] தொடர்பாக நான் கொடுத்த மனு சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட ரூ.6,000/- கொண்டுவந்திருக்கின்றீர்களா என்று கேட்டார். அப்பவும் நான் அவரிடம் ஏற்கனவே சொன்னதுபோல் என்னால அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது சார் என்றும், கூலி வேலை செய்துதான் பிழைப்பு நடத்திவருகிறேன் என்றும் சொன்னேன். அதற்கு அவர் ரூ.2,000/-த்தை குறைத்துக்கொண்டு, ரூ.4,000/-த்தை ரெடி பண்ணி கொண்டுவாங்க என்று சொன்னார். நான் சரியென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் மீண்டும் நேற்று [28/12/2020] காலை சுமார் 11/00 மணியளவில் வ.புதுப்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று கிராம நிர்வாக அலுவலர் திரு:-சிவராமலிங்கம் அவர்களை சந்தித்து நான் கொடுத்த மனு சம்பந்தமாக கேட்டேன். அப்போதும் அவர், அவர் கேட்ட ரூ.4,000/- கொண்டு வந்திருக்கின்றீர்களா என்று கேட்டு உங்களது மனுமீது நடவடிக்கை எடுத்துவிட்டேன் என்றும், நீங்கள் பணத்தை கொடுத்துவிட்டால் அந்த மனுவை வட்டாட்சியருக்கு அனுப்பிவிடுவேன் என்றும் சொன்னார். அதற்கு நான் அவரிடம் அந்த பணம் ரூ.4,000/- என்னால ரெடி பண்ண முடியாது சார் என்றும், நீங்கள்

பார்த்து செய்யுங்க சார் என்றும் சொன்னேன். அதற்கு அவர் மிகவும் சலிப்பாக என்னங்க நீங்க இந்த 4000/- ரூ பணத்தையும் ரெடி பண்ண முடியலன்னு சொல்றீங்க என்று சொல்லிவிட்டு இன்னும் 1000/- ரூபா வேணா குறைச்சுக்கிட்டு, 3000/- ரூபாய் ரெடி பண்ணி கொண்டுவாங்க என்றும், அதற்குமேல் குறைக்க முடியாது என்றும், ரூ.3,000/- கொண்டுவந்து கொடுத்தால்தான் நீங்கள் கொடுத்த மனுமீது நடவடிக்கை எடுத்ததை வட்டாட்சியருக்கு அனுப்புவேன் என்றும் கண்டிப்பாக சொல்லிவிட்டார். நானும் வேறுவழியில்லாமல் சரியென்று சொல்லிவிட்டு வீட்டிற்குவந்து யோசனை செய்து பார்த்ததில் அவர் நியாயமாக செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம ஏன் லஞ்சம் தரனும் என்று லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாமல் இன்று [29/12/2020] காலை 8/30 மணிக்கு விருதுநகர் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வந்து எனது அப்பா திரு.சுந்தரராஜ் பெயரில் உள்ள இடத்திற்கு அடங்கல் [பட்டா] வேண்டி நான் கொடுத்த மனுமீது நடவடிக்கை எடுக்க என்னிடம் ரூ.3000/- லஞ்சம் பணம் கேட்ட வ.புதுப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் திரு:-சிவராமலிங்கம் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.3,000/-த்தை ரெடிபண்ணி கையில் வைத்துக்கொண்டு, தங்களிடம் இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். இப்படிக்கு (Sd)[S.MAHENDRAN], 29/12/20, Sir, Received this complaint on 29/12/2020 at 08.30 hrs. The genuiness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found bad, and found prima-facie for the mentioned allegation of the complaint, since the registration of regular case is warranted in the prima-facie. The matter is intimated to the SP SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.9/2020 u/s 7 of PC (Amendment) Act 2018 at 09.30 hrs. today on 29.12.2020 and took up for investigation. (Sd) (பா.கருப்பையா) DSP/ V&AC/ Virudhunagar. 29/12/2020.

The Original FIR along with original complaint is submitted to the Hon'ble CJM/Spl.Judge for PC Act cases, Srivilliputhur and the copies submitted to the concerned officers.

பா. [signature] DSP/V&AC/Virudhunagar
(பா. கருப்பையா) 29/12/2020